# மத்தேயு நற்செய்தி தொடர்வினா விடைப் போட்டி

## (அதிகாரம் 10)

## I. சரியான விடை எழுதவும்

1. திருத்தூதர் பன்னிருவர்களின் பெயர்களை குறிப்பிடவும்.
2. இயேசு தம் சீடர் பன்னிருவருக்கு அளித்த அதிகாரங்கள் யாவை?
3. ''வழிதவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடம் செல்லுங்கள்'' என்று இயேசு யாரிடம் கூறினார்?

## II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்லவேண்டாம் | ~ | பையோ இரண்டு அங்கிகளோ மிதியடிகளோ கைத்தடியோ எடுத்துக் கொண்டு போக வேண்டாம் |
| 2. விண்ணரசு நெருங்கி வந்து விட்டது எனப் பறை சாற்றுங்கள். | ~ | அவர்கள் தகுதியற்றவர்களாயிருந்தால் அது உங்களிடமே திரும்பி வரட்டும். |
| 3. பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் இடைக் கச்சைகளில் வைத்துக் கொள்ள வேண்டாம். | ~ | மாறாக வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடம் செல்லுங்கள். |
| 4. வீட்டார் தகுதி உள்ளவராய் இருந்தால் நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவர்கள் மேல் தங்கட்டும். | ~ | அவரது வீட்டை அல்லது நகரைவிட்டு வெளியேறும்பொழுது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். |
| 5. உங்களை எவராவது ஏற்றுக் கொள்ளாமலோ நீங்கள் அறிவித்தவற்றுக்குச் செவிசாய்காமலோ இருந்தால் | ~ | நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்யுங்கள் தொழுநோயாளரை நலமாக்குங்கள், பேய் ஓட்டுங்கள். |

## III. சரியான விடையை கோடிட்ட இடங்களில் நிரப்பவும்

1. ______________________________ அனுப்புவதைப்போல் நான் உங்களை அனுப்புகிறேன்.
2. பாம்புகளைப்போல் _________உடையவர்களாகவும் புறாக்களைப்போலக் _________ அற்றவர்களாகவும் இருங்கள்.
3. மனிதர்கள் உங்களை _____________________ ஒப்புவிப்பார்கள்.
4. தங்கள் __________________ உங்களைச்___________________ அடிப்பார்கள்.

5. மனிதர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது __________ என ____________வேண்டாம். நீங்கள் என்ன வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்.

6. ஏனெனில் பேசுபவர் ______________, மாறாக உங்கள் ________________ உங்கள் வழியாய்ப் பேசுவார்.

7. ____________ வருகைக்கு முன் நீங்கள் __________________ எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்கமாட்டீர்கள்

8. __________________ போல் ___________ அல்ல, ____________ தம் தலைவரைவிடப் ________________ அல்ல.

9. வெளிப்படாதவாறு __________ ஒன்றும் இல்லை. அறியமுடியாதவாறு ________________ ஒன்றும் இல்லை.

10. நான் உங்களுக்கு இருளில் சொல்வதை ______________________ கூறுங்கள்

11. _________________ கேட்பதை __________________ தளத்திலிருந்து அறிவியுங்கள்

12. ___________ கொல்ல இயலாமல் _____________ கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம்

13. ஆன்மாவையும் உடலையும் _______________ அழிக்க ______________ அஞ்சுங்கள்

14. உங்கள் ____________ எண்ணப்பட்டிருக்கிறது. ____________ பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள்

## IV. சரியா அல்லது தவறா

1. மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ( சரி – தவறு )

2. மக்கள் முன்னிலையில் மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன். ( சரி – தவறு )

3. "நான் உலகிற்கு அமைதி கொணர வந்தேன் என எண்ண வேண்டாம். அமைதியை அல்ல, நெருப்பையே கொணர வந்தேன். ( சரி – தவறு )

4. தந்தைக்கு எதிராக மகளையும். தாயுக்கு எதிராக மகனையும். ( சரி – தவறு )

5. மாமியாருக்கு எதிராக மருமகனையும் நான் பிரிக்க வந்தேன். ( சரி – தவறு )

6. தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் எனக்கு தகுதியுள்ளோர். ( சரி – தவறு )

7. தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியுள்ளோர். ( சரி – தவறு )

8. இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைமாறு பெறாமல் போவர். ( சரி – தவறு )

9. இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக் கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைமாறு பெறமாட்டார். ( சரி – தவறு )

10. அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால் வேறொரு நகருக்கு ஓடிப் போக வேண்டாம். (சரி – தவறு )